**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.47/2021**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : நாச்சியார் | Caste | : |
| Father 's Name / Husband Name | : சங்கையாதேவர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**(04.03.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது கண்டுகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது அண்ணன் மகன் ஆவார். அவருடன் நான் சமாதானமாக போய் விட்டேன். வழக்கு விபரம் எதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் எனது அண்ணன் மகன் ஆவார். அ.சா.1 எனக்கு என்ன உறவு என்றால் எனது மகன் ஆவார். எங்களுக்கும் எதிரிக்கும் இடையே சொத்துதகராறு உள்ளது என்றால் சரிதான். முன்னால் இருந்தது. இப்போது அப்படி எதுவும் இல்லை. கடந்த 22.05.2016ம் தேதி மாலை 3.00 மணிக்கு எம்.ஜி.ஆர் சிலை முன்பு எதிரி அங்கு நின்றிருந்த என்னை பலர் பார்க்க கையால் அடித்தார் என்றும் அதை அ.சா.1 தடுக்க முற்பட்ட போது அ.சா.1 யும் என்னையும் எதிரி தகாத வார்த்தைகளால் பேசி அடித்து கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் எதிரி

இரும்பு கொக்கியால் அ.சா.1 ஐ காயப்படுத்தினார் என்றும் காயமடைந்த அ.சா.1 ஐ திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றும் சம்பவம் தொடர்பாக அ.சா.1 தாலுகா காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதாலும் அவருடன் சமாதானமாக சென்றுவிட்டபடியாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.47/2021**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Caste | : |
| Father 's Name / Husband Name | : ரத்தினசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(04.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர்கள் திரு.மாயாண்டி மற்றும் திரு.பாண்டியராஜ் ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். அவர்கள் பணி மாறுதலாகி வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 24.05.2016ம் தேதி 14.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.மாயாண்டி அவர்கள் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று வார்டு எண்.99 A வில் சிகிச்சையில் இருந்த சூரியராஜ் என்பவரை விசாரணை செய்து அவர் அளித்த புகார் மனுவைப் பெற்று 17.00 மணிக்கு நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 141/2016 பிரிவுகள் 294(பி), 323, 324,

506(2) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்து புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கு கொண்டு அன்றைய தினமே 18.00 மணிக்கு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பாலமுருகன் மற்றும் சுந்தர் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் திரு.பாண்டியராஜ் அவர்கள் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிரிகளை தேடி வந்த நிலையில் 19.09.2018ம் தேதி 14.30 மணிக்கு கண்டுகுளம் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து எதிரி செல்வம் என்பவரை காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து பாராவசம் ஒப்புவித்து திரேக பரிசோதனை முடித்து மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்து காயச்சான்று வழங்கிய திருமங்கலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.மாரியம்மாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சார்பு ஆய்வாளர் திரு.மாயாண்டி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு தனது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார்

செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.